தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 134

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ 12—0—0
3 மாதம்	ரூ 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை : கார்த்திகை 3உ புதன் (18—11—53) ☆ ☆ ☆ வெளியீடு : கார்த்திகை 4உ வியாழன் (19—11—53)

சி. ஆர். புகழ்பாடியின் ஏமாற்றம்!

தோழர் கருணாநிதி

இம்மாதம் 21-ந் தேதி சனிக்கிழமை விடுதலையடையும் தோழர் கருணாநிதி, அன்று மாலை திருச்சியில் நடைபெறும் வரவேற்பில் கலந்துகொண்டு, மறுநாள் 22-ந் தேதி காலை கல்லக்குடி தொண்டர் முகாமுக்குச் சென்று பார்வையிட்டு விட்டு, பின்னர், திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெறும். மாணவர் கூட்டத்தில் கலந்து கொண்டு, அன்று பிற்பகல் 1-30 மணி ரயிலில் திருவாரூர் செல்கிறார். 22-ந் தேதி ஞாயிறு மாலை திருவாரூர் வரவேற்பில் கலந்து கொள்வார்.

வந்தோம் வ[ந்]தோம், வடிவேலனை வழிபடுவோம் என்று திருச்[செ]ந்தூர் சென்றார் நிதி அமைச்சர்!

இந்தியாவில் நவீன ஆராய்ச்சிக் கூடம்!

★

பம்பாய், நவ. 17—

இந்தியாவில் காஸ்மிக்கிரணம், அணுசக்தி ஆகியவைகள் பற்றி ஆராய்ச்சி நடத்தும் டாட்டா ஆராய்ச்சிக் கழகம் நவீன வசதிகள் பொருந்திய புது கட்டடத்திற்கு மாற்றப்படும்.

த[லை]வரும், கொடியேற்றுவோரும் கொ[ள்]கை பக்கம் கால் வைக்கவில்லை!

காங்கிரஸ் குழுவின் ஒத்துழைப்பில்லாத ஆச்சாரியார் ஆத[ரவு] மாநாடு 'அரோகரா!'

கல்வித் தி[ட்]ட மாநாட்டுக்கு ஏற்பட்ட ம[ட்]ந்தான தோல்வி!

(டிரங்க் செய்தி)

திருநெல்வேலி, நவ. 16—

ஆச்சாரியாரின் [தி]ருத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை ஆதரிப்[பதா]க, இன்று காலை, பாளையங்கோட்டையில் ஏ[ற்பா]டு செய்யப்பட்ட திருநெல்வேலி தாலுக்கா மாநாட்[டு]க் கூட்டம் நடைபெறவில்லை.

இக்கூட்டம், பாளையங்கோட்டை அசோக் [டாக்கீ]ஸில், இன்று காலை 9 மணிக்கு தோழர் எஸ். டி. சிவசுப்பிரமணிய ந[ாடார் (சட்ட] சபை உறுப்பினர்) தலைமையில் நடைபெறுவதாக இருந்தது.

இம்மாநாட்டை, அமைச்சர் சி. சுப்பிரமணியம் திறந்து வைப்பதற்கும், சட்டசபை உறுப்பினர் தோழர் என். சோமயாசுலு கொடியேற்றி வைப்பதற்கும் ஏற்பாடாகியிருந்தது.

காலை 10-30 வரை, இந்த டாக்கீசில், சுமார் 300 பேர்கள் கூடியிருந்தனர்.

இம்மாநாடு, திருநெல்வேலி தாலுக்கா மக்களின் எதிரொலிப்பதாக இல்லையென்றும், இத்தாலுக்காக் காங்கிரஸ் குழு, இம்மாநாட்டை ஆதரிக்கவில்லையென்றும் குறிப்பிடப்பட்டு அச்சடிக்கப்பட்ட அறிக்கைகள் விநியோகம் செய்யப்பட்டன.

சென்ற சனிக்கிழமையன்று இரவு இம்மாநாட்டிற்குத் தலைமை வகிக்கத் தோழர் மேகநாதத்திடம் தான் இசைவு தெரிவித்ததாகவும், தனக்கு இதற்கு மேல் ஒரு தகவலும் தெரியாதென்றும் இக்கூட்டத்திற்கு வந்த மாநாட்டுத் தலைவர் தோழர் சிவசுப்பிரமணிய நாடார் அறிவித்தார்.

அமைச்சர் சுப்பிரமணியமும், என். சோமயாசுலுவும் வராததினால் இக்கூட்டம் நடத்தப்படவில்லை.

இன்று காலை, திருச்செந்தூரிலிருந்து தூத்துக்குடிக்கு அமைச்சர் சுப்பிரமணியம் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★

வெறியர்களுக்கான நெறி!

"மக்கட்கு ஒழுக்கம் வேண்டும். ஒழுக்கமின்மையும், போலிக் கடவுள் பக்தியுமே நாத்திகத்தை வளர்க்கிறது. உலக நாகரிகத்தில் உயர்ந்தது ஆத்திகம். 5000 ஆண்டுகட்கு முன் தோண்டி எடுக்கப்பட்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் சைவ சம்பந்தத்தைக் காட்டுகிறது. தெய்வ நிந்தனை செய்வோரை, இகழாமல் சகோதரராய் எண்ணி, தம்மில் ஒருவராக தெய்வ நிந்தனை செய்யாமல் சேர்த்துக் கொள்வதே உண்மையிலே [...] பக்தியுள்ளோரின் சே[...]

[...]த்த முனிவர்
18—11—53 '[...]மணி'

★★★★★★★★★★★★

தோழர் பரமேஸ்வரன் சென்னை மேயரானார்

உதவி மேயர் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி

சென்னை, நவ. 18—

நேற்று மாலை நகர சபைக் கூட்டத்தில் முனிசிபல் கட்சியின் அபேட்சகரான பி. பரமேஸ்வரன், 1953-54ம் ஆண்டிற்கு மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உதவி மேயர் பதவிக்கு நின்ற காங்கிரஸ் கட்சி அபேட்சகர் கே. ராமதாஸ் தோல்வி அடைந்தார். வேணுகோபால் ராவ் வெற்றி பெற்றார்.

அபராதத் தொகைக்கு சைகிள் ஜப்தி!

பூட்டை உடைத்து வீட்டில் நுழைந்தனர் போலீசார்!

தாப்பாய், நவ. 15—

லால்குடி தாலுகா, தாப்பாய் கிராமத்திலிருக்கும் தி. மு. கழகத் தொண்டரும் கல்லக்குடி போராட்டத்தில், சிறை சென்று விடுதலை அடைந்தவருமான தோழர் பி. இராவணன் என்பவரின் வீட்டில், 15—11—'53-ல், (வழக்கின்போது விதிக்கப்பட்ட அபராதம் ரூ. 35-க்கு) ஒருவரும் இல்லாதபொழுது, பூட்டை உடைத்து, ரூ 100 பெறுமானமுள்ள சைகிளை ஜப்திசெய்தனர். அருகிலிருந்த நண்பர் ஒருவர், அபராதத் தொகையைக் கட்டி, சைகிளை பெற்றுவிட்டார்.

தோழர் பி. இராவணன் அபராதத் தொகையைக் கட்ட மறுத்து, அதற்காக, கூடுதல் தண்டனையான சிறைவாசத்தையும் அனுபவித்து (மொத்தம் 3 மாதம்) விடுதலையானார்.

குன்றைத் தோழர்கள் சிறை சென்றனர்

குன்றை, நவ. 16—

ரயில் நிறுத்தப் போரில் கலந்துகொண்ட 36 தி. மு. கழகத் தோழர்களில், ஏற்கெனவே சிறை புகுந்த 27 தோழர்கள் போக மீதமிருந்த 9 பேர் மீது பதிவாகியிருந்த வழக்கு நான்கு வாய்தாக்களுக்குப்பின் 16—11—53ல் தோழர்கட்கு ரூ. 20 அபராதமும், தவறினால் 1 வார சிறைத் தண்டனை என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை சென்றனர்.

அவர்கள் :—வி. கா. ஒளியழகன், டி பி எஸ். மணி, தி. ச. முருகேசன்: திருமலை, அப்துல்காதர், அமீர், வேலாயுதம், மாரிமுத்து, பாச்சா, (அப்துல்).

கல்லக்குடி அறப்போர் தலைவர் கருணாநிதி முல்லை-சக்தி, குழந்தைவேல், குமரவேல், கஸ்தூரிராஜு ஆகியோர் விடுதலை

கல்லக்குடி அறப்போர்

இன்று 128-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

இன்று 127-வது நாள்

திருச்சி, நவ. 18

21—11—53 சனிக்கிழமை காலை 9 மணிக்கு, திருச்சி மத்திய சிறையிலிருந்து கல்லக்குடி அறப்போர் குழுத் தலைவர் தோழர் கருணாநிதியும் தோழர்கள் முல்லை-சக்தி, கஸ்தூரிராஜு, குமரவேல், குழந்தைவேல் ஆகியோர் விடுதலை அடைகின்றனர்.

காலை 9 மணிக்கு சிறைவாயிலில் வரவேற்பு; 9-30 மணிக்கு சிறைவாயிலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, பாலக்கரை, பெரிய கடை வீதி வழியாக வந்து மாவட்டக் கழக அலுவலகத்தில் முடிவடையும்.

திட்டக்குடி தி.மு.க. துணைச் செயலாளர் தாக்கப்பட்டார்

காங்கிரஸ் காளைகளின் 'கைங்கரியம்!'

திட்டக்குடி, நவ. 17—

13—11—53-ல், இவ்வூர் தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கோ. சிங்காரம் என்பவரை சில காங்கிரஸ் காளைகள் திடீரென்று தாக்கினர்.

தாக்குதல் பற்றிய புகாரை உள்ளூர் சப்-இன்ஸ்பெக்டர் விசாரித்தார். தோழர் சிங்காரம் தாக்கப்பட்டது, காங்கிரஸ் காளைகளால்தான் என்று நம்பகமான இருவர் சாட்சியமளித்தனர்.

நிலைமை இவ்வாறிருக்க, 'சு. மி.' இதழ் திரித்து எழுதியது கண்டிக்கத் தக்கதென திட்டக்குடி தி. மு. கழகச் செயலாளர் மு கோவிந்தன் அறிவிக்கிறார்,

ஜவர் சிறையில்! இன்று 79-வது நாள்

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை : 18—11—1953 புதன்

கான்யூட் கட்டளை!

கான்யூட் என்ற அரசர்க்கரசன், ஒருநாள் கடற்கரை ஓரம் உலாவச் சென்றான். விட்டு விட்டு கரைகளை மோதிக் கொண்டு இருக்கும் கடல் அலைகளைக் கண்டான். ஆத்திரம் கொண்டான். "நான் அரசர்க்கரசனாக இருந்துங்கூட என்னை மதிக்காமல் இந்த அலைகள் இப்படி நடந்து கொள்கின்றனவே" என்று, உடன் இருந்த மந்திரியைக் கடாவினான் "அரியாசனத்தில் அமர்ந்து நீர் கட்டளைப் பிறப்பித்தால், கடல் அலைகளையும் நம் ஏவல் வழி நிற்கும்! மன்னர் மன்னவா!" என்றான் மதியூக மந்திரி.

அரியாசனம் கடற்கரைக்கு வந்துவிட்டது. மன்னர் மன்னன் அதன்மீது கம்பீரமாக அமர்ந்தான்; கொடிய அலைகளை நோக்கினான்; 'நில்!' என்று கட்டளையிட்டான். அலைகள் பின்வாங்கின, புறைப்படி! பின்னர், முன்னிலும் வன்மையாக அலைகள் கரையை வந்து மோதின. அரியாசனத்தோடு அரசனும் கடலிலே மூழ்கினான், என்று ஒரு கதை உண்டு.

இந்தக் கதையைத்தான், இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் நேரு அவர்களின் போக்கு, நமக்கு அடிக்கடி நினைவுறுத்திக்கொண்டிருக்கிறது.

மொழிவழி மாநிலக் கோரிக்கை. வெறும் தீர்மானம் போடும் கட்டத்தைத் தாண்டி, 'அடைந்தே தீருவோம்,' என்ற ஆர்ப்பாட்டக் கட்டத்தை அடைந்துவிட்டது.

மொழிவழி மாநில அமைப்புக் கருத்தை உருவாக்கினவர்களும், நன்கு வளர்த்து விட்டவர்களும் காங்கிரஸ் குழுவினரேயாவர். தங்கள் கட்சி அமைப்பையும், இந்த அடிப்படையின்மீது நிர்மாணித்துக்கொண்டு செயலாற்றியும் [illegible]னர்—செயலாற்றியும் வருகின்றனர். இதனால் செல்[illegible]க்கும் பெற்றனர். விருப்பையும் பெற்றனர்.

காங்கிரஸ் குழுவினராலேயே உருவாக்[illegible]டு, வளர்க்கப்பட்டு வந்த மொழி வழி [illegible]த்து, வெள்ளையர் வெளியேறின அன்றே இட[illegible]ருந்து கொண்டு விட்டது. வெறும் கருத்தளவில் [illegible]த்திருந்ததை நாட்டின் நடைமுறையிலும் காண [illegible] மொழி வழி மக்களும் குளுரைத்துக் கொண் [illegible].

முன்னர் [illegible] த வாக்குறுதியைக் கைநழுவ விடாமல், ஆட்சி [illegible] இடைத்த உடனே, மொழிவழி அமைப்பை [illegible] நடத்தக் காங்கிரஸ் மேலிடம் முன்வந்திருந்தால், மொழி வழி கோரிக்கையாளர்களின் விருப்பத்தையும், செயலிலும் விரும்பத் தகாத விளைவு தலைதூக்க நியாயமிருந்திருக்காது.

என்ன காரணமோ, முன்னுள் குறிப்படி பின்னல் நடந்து கொள்ள காங்கிரஸ் மேலிடத்தார் ஒருப்படவில்லை கோரிக்கையைப் புறக்கணிக்கவும், 'ஆகாது—அடாது—பிரிவினை கூடாது' என்றெல்லாம் ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். விளைவு, விபரீதமாய்த்து பலவித கஷ்ட நஷ்டங்களுக்குப் பிறகு ஆந்திர மாநிலம் உருவெடுத்தது. வேண்டா வெறுப்பாக, வேறு வழி இல்லாததால், காங்கிரஸ் மேலிடம் ஆந்திர மாநில அமைப்புக்கு உடன்பட்டது.

ஆந்திர மாநில அமைப்பு, மற்ற மொழிவழி மாநிலக் கோரிக்கையினருக்கு, மேலும் தங்கள் கோரிக்கையை வற்புறுத்தவும், வலியுறுத்தவும், ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது.

இந்த நிலைமையைக் கண்டதும், மொழி ஒன்றையட்டுமே [illegible]லாகக் கொண்டு, மாநிலங்கள் இனி பிரிக்க முடியாது—கூடாது—மற்றும், சில துறைகளையும் கருத்தில் கொண்டுதான், இனி மாநிலப் பிரிவினை இருக்க வேண்டும் என்று காங்கிரசின் தலைவரும், இந்தியப் பிரதமருமான நேரு அவர்கள் அறிவித்துவிட்டார்—இல்லை—ஆணையிட்டு விட்டார்.

அவர் கட்டளைக்குத் தக்க பதில் தரும் போக்கில், மற்ற மொழிவழி மாநிலக் கோரிக்கையினர் கிளர்ச்சிக் குரல் வலிவாக, முன்னிலும் கூடுதலாக ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. ஆந்திர மாநிலம், மொழியை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும்போது, கன்னடம், மலையாளம், மராத்தி, பஞ்சாபி ஆகிய மொழிகளின் அடிப்படையில் மாநிலங்கள் அமைவது ஏன் கூடாது? எனக் கேள்வி வன்மையாக எழுகிறது! ஆந்திர மாநில அமைப்பால் அழிந்துபடாத இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமை, கட்டுக்கோப்பு, மற்ற மொழிவழி மாநில அமைப்புகளால் எப்படிக் குலைந்துவிடும் என்ற வினாக்கள் வெடித்து வேகமாகத் தாக்குகின்றன

இந்தியத் துணைக்கண்டத்தின் நிர்வாக நலன் என்றப் போர்வையிலதான், இப்பொழுதுள்ள வகையில் மாநிலங்களை வெள்ளையரும் அமைத்தனர்; அது பொருந்தாது—கூடாது என்பதாலேயே மொழியை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்களை அமைத்து, இந்தியாவைத் திருத்தம் செய்யவேண்டும்

என்று காங்கிரஸ் பெருங்குழு நினைத்தது, அதன்படியே பேசியும் வந்தது; இப்போது ஏன், இதிலிருந்து பின்வாங்க வேண்டும் என்ற கேள்வி கிளம்புகிறது.

சமாதானம் இல்லை! மொழிவழி மாநிலக் கோரிக்கையின் காரணத்தைப் பொருந்தாததாகக் காட்ட சிறந்த காரணம் கூறி, கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. வெறும் கட்டளை! கருத்தை மாற்ற முடியாத உத்தரவை நேரு போடுகிறார்!

காங்கிரஸ் கட்சியினரை, நேருவின் கட்டளை கட்டுப்படுத்தலாம். நாட்டு மக்களை, காங்கிரஸ் கட்சியில் கலவாத கோடானுகோடி மொழிவழி மாநிலக் கோரிக்கையினரை, கட்டுப்படுத்தும் ஆற்றல், அந்தக் கட்டளைக்குக் கிடையாது—முக்காலும் இது உண்மை!

இந்தக் கட்டளை, காங்கிரஸ் கட்சியினரைக்கூட கட்டுப்படுத்திவிடும் என்று சொல்வதற்குமில்லை—நம்புவதற்குமில்லை!

ஆந்திர மாநிலம், காங்கிரஸ் கட்சியினர், அறுதாபிகள் கிளர்ச்சியினால் மட்டுமே உருவாகவில்லை; பெரும்பாலான ஆந்திர மக்களின் தீவிரக் கிளர்ச்சியினால்தான் என்று கூறுகிறது, காலம்!

எதோ, பரம்பரைப் பழக்கத்தால் பூஜா மனோபாவம் கொண்டு, தங்களைத் தரிசிக்க வருகிறவர்களை எல்லாம், தம் ஏவல்படி ஆடும் பொம்மைகள் என்று இந்தியப் பிரதமர் நினைத்துக்கொண்டு இருப்பதின் விளைவுதான், இந்த 'அதிகார ஆணை' என்பது தெளிவு.

வாக்குறுதியை மீறுவோர் சொல்லுக்கு நாட்டு மக்களிடம் மட்டுமல்ல, சொந்தக் கட்சி மக்களிடம் கூட மதிப்பு இருக்காது என்பது, உண்மையிலும் உண்மையாகும் என்று கூறி முடிக்கிறோம்

தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்களை இந்துமத வெறியர்கள் இம்சித்தார்களாம்!

கிறிஸ்துவசங்க புகாருக்கு கட்ஜூவின் சமாதானம்!

புதுடில்லி, நவ 16—

உத்திரப் பிரதேசத்தில் உள்ள மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சாவாரா என்ற கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட கிறிஸ்[illegible] இந்துமத வெறியர்கள் அடித்து உதைத்து இம்சித்தார்கள் என்று அகில இந்திய கிறிஸ்துவ சங்கத்தைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று, உள்நாட்டு இலாகா அமைச்சர் டாக்டர் கட்ஜூவிடம் இரண்டு நாளைக்கு முன் நேரில் முறையிட்டு இருக்கிறது.

"மதம் மாறியுள்ள இந்தக் கிறிஸ்துவர்களை, மீண்டும் இந்து மதத்தைத் தழுவுவதற்கு கட்டாயப்படுத்த வேண்டும் என ஒரு கட்டளையை கட்ஜூ பிறப்பித்து இருக்கிறார்" என்று, அந்த இந்துமத வெறியர்கள் [illegible], தூதுக்குழு கொடுத்துக் கொண்ட புகார் மனுவ[illegible]ப்பிடப்பட்டு இருக்கிறது.

இந்துமத வெறியர்க[illegible] அக்கிரமச் செயலுக்கு, த[illegible] யரைத் தொடர்புபடு[illegible] பேசுவது [illegible] தக்கதென்று[illegible] யாகக் கண்டிக்கத் த[illegible] ஆம் கட்ஜூ [illegible] கூறினார்.

அப்படி ஒன்றும் கட்டளை இடவில்லை என்றும் இப்படி கூறு[illegible] கட்டினை பொய் என்[illegible] படி அக்கிரமச் செய[illegible] இந்திய அரசியல் [illegible] எவரையும் அனுமதிக்கவில்லை என்றும் கட்ஜூ நிலைமையைத் தெளிவுபடுத்தினார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

1 [illegible] பாகிஸ்தான் கிராமவாசிகளுக்கு ஒரு லட்சத்து பேருக்கு ஒருவர் [illegible] கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.

2 உலகத்திலேயே மிகவும் உயரமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தந்திப் போக்குவரத்து நிலையம், இந்தியாவிலுள்ள [illegible] எனுமிடத்தில், கடல் மட்டத்துக்கு 13 500 அடி உயரத்திலே உள்ளது. இந்த நிலையமும் இந்தியத் தந்திப் போக்குவரத்து இலாகாவின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

3 சென்ற ஆண்டு, இந்தியா, 82 98 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள, 20 லட்சம் டஜன் பீடிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது.

4 1953 செப்டம்பர் மாதத்தில், இந்தியத் தபால் நிலையங்களின் மூலம் 16 74 கோடி ரூபாய்க்கு டணியார்டர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

எல்லாம் அங்குதானா?

புதுடெல்லி, நவ. 17—

அடுத்த மூன்று ஆண்டுகளில் 15 மாநிலங்களில் ஏராளமான குழாய்க் கிணறுகளை அமைக்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. இதற்குச் சுமார் ரூ 24 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. சுமார் 3 000 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படலாம்.

[illegible] செயலாளர் [illegible], குழாய்க் கிணறு திட்ட நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதில் 2 650 குழாய்க் கிணறுகள் உ. பி. யிலும், பஞ்சாபில் 655-ம், பெப்சுவில் 300-ம், பீஹாரில், 405-ம் அமைக்கப்படும்.

சென்னை மாநிலத்தின் மக்களில் உழவர் தொகை!

சென்னை மாநிலத்தில் மூன்று கோடியே ஐம்பத்தி எழு இலட்சம் மக்கள் உள்ளனர்; அவர்களில், இரண்டு கோடியே லருபது லட்சம் மக்கள் விவசாயத்தினுல் ஜீவனம் செய்வோர்.

மொத்த மக்கள் தொகையில் 61 5 சத விகிதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள்.

தஞ்சை ஜில்லாவில், 29 80 000 மக்கள் தொகையில் 20 85 000 மக்கள் அதாவது 69.9 சத விகிதம் பேர் விவசாயத்தில் சம்பந்தப்பட்டவர்கள்.

தென்னார்க்காட்டில் 27 76 000 மக்கள் தொகை; விவசாயிகள் 22 70 000; அதாவது, 81 8 சத விகிதம்;

வட ஆற்காடு மக்கள் தொகையில் விவசாயிகள் 69 5 சத விகிதம்;

திருச்சிராப்பள்ளியில் 71 5 சதம்;

இந்தியாவின் மக்கள் தொகை இன்று 36 கோடியாக உள்ளது. 1961-ல் அது 41 கோடியாகவும், 1971-ல் அது 46 கோடியாகவும், 1981-ல அது 52 கோடியாகவும் பெருகும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இந்தியாவில உள்ள மக்களில் தென்னிந்தியாவில், 26 சத விகிதத்தினர் பணம் சம்பாதிப்பவர்கள் பொறுப்பிலிருந்து வளர்பவர்கள் தென் இந்தியாவில்தான் 69 சத விகிதமுள்ளனர்.

பாகிஸ்தான் அரசியல் சட்டத்தைப் புகலாகக்கொண்டு மதவெறியர் மூஸ்தீபு

அங்குள்ள இந்துக்கள் பெயர் கூறி 'ஜன சங்கம்' இங்குக் கிளர்ச்சி நடத்தப்போகிறது!

புனா, நவ. 17—

இந்துமத வெறியர்களின் சார்பில் இயங்கிவரும் அரசியல் கட்சியான அகில இந்திய ஜன சங்கத்தின் செயலாளர் தீனதயாள்ஜி உபாத்தியாயா பாகிஸ்தான் அரசியல் சட்டத்தைப் புகலாகக் கொண்டு கிளர்ச்சி செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானில் உள்ள இந்து சிறுபான்மையோரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கம் ஒன்றையே கொண்டு கிளர்ச்சி செய்யப் போவதாகவும், கிளர்ச்சியின் உருவம் எப்படி இருக்கும் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை என்றும் இத்துறையில் வெகு ஜன வாக்கைத் திரட்டுவதான கிளர்ச்சியில் அடிப்படைக் கருத்து என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அரசியல் சட்டம் உருவாக்கப்படுவதில் உள்ள நோக்கத்தில் பிரதமர் நேரு கருத்துச் செலுத்தினதற்காக, அவருக்குப் பாராட்டும் தெரிவித்திருக்கிறார் இவர்.

இந்தியா வழி செல்லும் பிரெஞ்சுத் துருப்புகள்

ஆயுதம் தாங்கிச் செல்லக்கூடாதென டில்லி அறிவிப்பு

கோழிக்கோடு, நவ 17—

இந்திய யூனியன் வழியாகச் செல்லும் பிரெஞ்சு — இந்திய சிப்பாய்களும், போலீசாரும் ஆயுதமேந்திப் போகக் கூடாதென இந்திய சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

பிரெஞ்சுப் போலீசார் ஆயுதபாணிகளாக இந்திய யூனியனில் செல்வதற்குத் தடை விதிக்க வேண்டும் என பிரெஞ்சு இந்திய மகாஜன சபை கேட்டிருக்கிறது. அந்த வேண்டுகோளின் விளைவாகவே இந்திய சர்க்கார் இவ்வாறு உத்தரவிட்டிருக்கிறது.

பணம் கொண்டு ஆள்கிறார்!

"சைவமும்—தமிழும் தழைக்க வேண்டுமென்றால், சைவ சமயமும், தமிழால் ஆகிய வைணவமும், தழைத்தோங்க என்பதே பொருள். சிவனார் திருஞான சம்பந்தருக்குப் பால் கொடுத்தும், அப்பரைச் சூலை கொண்டும், மாணிக்க வாசகரைக் கால் கொண்டும், சேரமானை நூல் கொண்டும் ஆட்கொண்டார்."

"முருகனோ நம்மை யெல்லாம் வேல் கொண்டு ஆட்கொண்டார். ஆஞ்சுப் பழம் உடல் நோயைத் தீர்ப்பது போல், ஆண்டாள் பாக்களாகிய ஆஞ்சுப் பழம் உயிர் நோயைத் தீர்க்கும். இறைக் கண்டு மயங்குகின்ற மயில் அழகாயிருப்பினும் கீழே வைத்தும், ஒளி கண்டு மகிழ்கின்ற சேவல் அழகு குறைவாக இருப்பினும் அதை மேலே வைத்துக்கொண்டார் முருகர்."

—வெங்கடேஸ்வரானந்தர்
18-11-53 'தினமணி'

அரச குடும்பத்தினரின் சொத்துக்கள்

பறிமுதல் செய்ய உத்திரவிடப்பட்டதேன்?

கெய்ரோ, நவ 16—

"மன்னர் குடும்பத்தினரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்ற எண்ணமே முதலில் கிடையாது. மற்ற குடிமக்களைப் போலவே அரச குடும்பத்தினரும் சர்க்காருடன் ஒத்துழைப்பர் என்று எதிர்பார்த்தோம்; ஆனால், மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிலர், தங்கள் பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்ப ஆரம்பித்தனர்; இப்பணத்தில் சில கைப்பற்றப்பட்டுவிட்டன. இதனால், சொத்துக்களைப் பற்றி மக்கள் அலவலம் அளிக்க புரட்சிகரக் கவுன்சில் தீர்மானித்தது," என்று எகிப்து மந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

சொத்துக்கள் பறிக்கப்பட்ட மன்னர் குடும்பத்தினர் வீடு, துணிமணி, மோட்டார்கார்கள் ஆகியவைகளை யெல்லாம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். வயதானவர்களுக்கு மானிய உதவி அளிப்பது பற்றியும் சர்க்கார் கவனிக்கும் என்று ஜனாதிபதி நகீப் அறிவித்திருக்கிறார்.

முன்னாள் இளவரசிகள், இப்போதுள்ளதுபோலவே அரண்மனையில் வசித்து வரலாம் என்றும், ஆனால், வாடகை மாதம் ஒரு பவுன் கொடுத்துவிட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரூக் அரண்மனையிலிருந்து விற்பதற்காக ஒதுக்கப்பட்ட பொருள்கள் பற்றி ஜாபிதா தயாரிக்கப்பட்டபோது, தங்கத்தில் ஆன பட்டாகத்தி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. பரூக்கின் மூதாதையர் ஒருவருக்கு, நெப்போலியனால் இந்தப் பட்டாக்கத்தி பரிசளிக்கப்பட்டதாகும்.

வைரங்கள் இழைத்த பிளாட்டினம் கிரீடம் ஒன்றும், இதர வைர ஆபரணங்களுடன் மற்றொரு அரண்மனையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டன.

சேலூர் தி. மு. கழகம்

11—11—53ல், தி. மு. கழகச் செயற்குழு கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அது போது அக்டோபர் மாத கழக வரவு—செலவு கணக்கை சரி பார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

க்ஷயரோக நிவாரண நிதிக்கு ஸ்டாம்புகள் விற்பனைப் பட்டதில், சென்ற நான்கு மாதங்களில், இந்தியா பூராவிலும் ரூ. 20,000 கிடைத்திருக்கிறது.

★★

தூத்துக்குடி சதி வழக்கு நிதிப்பையை நிரப்புங்கள்

★

பண்டைய கிரேக்க நாட்டில் 'ஸ்பார்ட்டா' என்ற நகரிலிருந்தவர்கள், வீரத்துக்கும், எதையும் விரைந்து செயலாற்றும் தன்மைக்கும் பேர்பெற்றவர்கள். அவர்களுடைய அறிவிப்புகளும், பேச்சுகளும் மிகக் குறுகிய அளவில், விளங்கவைப்பதாகவே இருக்கும்.

ஒருசமயம் அவர்களுடைய நாட்டுக்குப் பக்கத்திலிருந்த தீவில் பஞ்சம் ஏற்பட்டது. அதற்காக உதவி வேண்டி, அந்தத் தீவிலிருந்தவர்கள், சில தூதுவர்களை ஸ்பார்ட்டா நகரத்துக்கு அனுப்பினார்கள். அந்த தூதுவர்கள், ஸ்பார்ட்டா நகரத் தலைவர்களின் [illegible], மணிக்கணக்கில், தாங்கள் படும் அவதியை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

நீண்ட நேரம் கேட்டு முடிந்தபின் ஸ்பார்ட்டா நகரத்தார்கள், தூதுவர்களைப் பார்த்து, "நீங்கள் பேசியதின் இரண்டாவது பகுதி எங்களுக்குப் [illegible] புரியவில்லை; முதற் பகுதியை நாங்கள் மறந்துவிட்டோம்," என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

ஏமாற்றமடைந்த தீவுக்காரர்கள், மீண்டும் ஒரு தூதனைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்—ஆனால் ஒரு நிபந்தனையுடன்—வேண்டுகோள் மிகவும் சுருக்கமாக இருக்க வேண்டுமென்று.

இரண்டாவது தூதன், ஸ்பார்ட்டா நகரத்தார்களைச் சந்தித்ததும், ஒன்றும் பேசாமல், தான் [illegible] கொண்டுவந்த பெரிய மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்து காலிப் பைகளை உதறினான்.

ஒரு பையைக் கையிலெடுத்து, "இது காலியாய் இருக்கிறது; நிரப்புங்கள்" என்று சொன்னான்.

உடனே ஸ்பார்ட்டா நகரத்தார்கள், அந்தப் பைகளையெல்லாம் தானியத்தைக் கொட்டி நிரப்பிவிட்டார்கள்.

மிகக் குறுகிய அறிவிப்பால், தானடைந்த வெற்றிகண்டு தூதன் மகிழ்ந்தான்.

அப்பொழுதும் ஸ்பார்ட்டா நகரத் தலைவர் அவனை விடவில்லை; விடைபெற்றுக்கொள்ளும்பொழுது, அவனைப் பார்த்து,

"பை காலியாக இருக்கிறது என்று நீ கூறியிருக்க வேண்டியதில்லை; அதை நாங்களே பார்த்துவிட்டோம்; பிறகு 'நிரப்புங்கள்' என்று சொல்லியிருக்க வேண்டியதில்லை; காலியாயிருப்பதிலிருந்தே அதை நிரப்ப வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும்." என்று சொன்னாராம். (மன்றம்)

★

நாங்களும், உங்களுக்கு அதிகம் கூறத் தேவையில்லை!

★

<u>மறந்துவிடாதீர்கள்!</u>

தூத்துக்குடி சதி வழக்கில்

96 தோழர்கள்மீது ஆச்சாரியார் அரசாங்கம் சதி வழக்குத் தொடர்ந்துள்ளது. சர்க்கார் தரப்பில் 91 சாட்சிகள் சேகரிக்கப்பட்டுள்ளனர். சதி வழக்கில் 16 சட்டப்பிரிவுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி சதி வழக்கு நிதிப்பையை நிரப்புங்கள்

கீழ்க்கண்ட முகவரிக்கு நிதி அனுப்புக:—

அ. பொன்னம்பலனார், "அறிவகம்," இராயபுரம், சென்னை-13

★★

பொதுக் கூட்டம்

21—11—53 சனி மாலை 6 மணிக்கு

திருச்சி டவுன் ஹால் முன்

தலைவர்: எ. பி. தர்மலிங்கம்

பேச்சாளர்கள்:

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.
மு. கருணாநிதி
கண்ணதாசன்
எம். எஸ். மணி

—கல்லக்குடி அறப்போர்க் குழு, திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

தி. மு. மாணவர் கழக துவக்க விழா

22—11—53 ஞாயிறு காலை 9 மணிக்கு

திருச்சி தேவர் ஹாலில்

பேச்சாளர்கள்:

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.
க. அன்பழகன், எம். ஏ.
மு. கருணாநிதி
கண்ணதாசன்
எம். எஸ். மணி

அமெரிக்கா-பாக். இராணுவ உடன்படிக்கை தற்போதைக்கு இல்லையாம்!

டல்லஸ் கூறுகிறார்

வாஷிங்டன், நவ. 17—

பாகிஸ்தானுடன் இராணுவ உதவி உடன்படிக்கை, அல்லது பாகிஸ்தானில் யுத்த தளங்கள் அமைப்பு ஒப்பந்தம் பற்றி தற்சமயம் பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடைபெறவில்லை என்று யு. எஸ். ராஜாங்க மந்திரி டல்லஸ் இன்று கூறினார்.

"எதிர்காலத்தில், பாகிஸ்தானுடன் இராணுவ ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள முடியாதென்பது அமெரிக்காவுடைய அபிப்பிராயமா?" என்று கேட்கப்பட்டது.

"அது கருத்தல்லவென்றும், ஆனால் அதுபற்றி தற்சமயம், பாகிஸ்தானுடன் பேரம் நடக்கவில்லை என்பதுதான் பொருள்," என்றும் அவர் கூறினார்.

தம்முடனும், ஐசன்ஹோவருடனும் அண்மையில் பாக் கவர்னர்-ஜெனரல் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும், ஆனால், பேரப் பேச்சு எதுவும் நடைபெறவில்லையென்றும் டல்லஸ் சொன்னார்.

ஆனால், அமெரிக்கா, இராணுவத் தளவாடங்கள் தந்தால், பாகிஸ்தான் இராணுவத் தளம் தயார் என அமெரிக்காவிடம் பாகிஸ்தான் தெரிவித்துவிட்டதாக ஒரு பாக். உயர்தர அதிகாரி ஐ. நா. அமெரிக்கப் பிரதிநிதியிடம் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

மக்கள் சேவையில் — 'கடவுளைக் காணுங்கள்!'

இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் இணைக்கும் இணைப்புப் பாலம் இளைஞர்கள்

சென்னை, நவ 16—

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற மாணவர் சமூக சேவை கழகத்தின் மாநாட்டில் பேசிய டாக்டர் அழகப்ப செட்டியார் கூறியதாவது:—

"இந்த நாட்டின் பாரம்பரையை உணர்ந்துகொள்ள வேண்டும். கோவிலுக்குச் செல்வதில்லாமல் மக்களுக்குச் சேவை செய்வதின் மூலம் கடவுளை வணங்குங்கள்."

திருமதி [illegible] தலைமை தாங்கிப் பேசுகையில் டாக்டர் அழகப்ப செட்டியார் அறக்கச் செய்துள்ள சேவைகளைப் புகழ்ந்து மேலும் பேசியதாவது:

"தாழ்ந்த நிலையிலுள்ள இந்திய மக்களின் வாழ்க்கைத் தரம் இளைஞர்களுக்கு தரப்பட்டுள்ள ஒரு அறைகூவல். கடந்த காலத்திற்கும், வருங்காலத்திற்கும் ஒரு இணைப்புப் பாலமாக இளைஞர்கள் உள்ளனர். நாட்டின் நம்பிக்கையே அவர்கள்தான். அவர்கட்கு பெரும் பொறுப்புகள் உள்ளன. அவர்கள் கடினமாக உழைத்து நாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த குறிப்பிடத்தக்க தங்களின் பங்கைத் தருவார்கள் என நம்புகிறேன்."

டாக்டர் அழகப்பச் செட்டியார் பேசுகையில், "இந்த மகாநாடு இம்மாதிரி ஒரு பெரிய கட்டிடத்தில் நடத்துவதைக் காட்டிலும், சமூக சேவை செய்யத் தகுதிமிக்க, ஏதாவதொரு கிராமத்தில், ஒரு கூடாரத்தில் நடத்தியிருந்து, தாங்கள் செய்யும் சமூக சேவையில் அங்குள்ள கிராம மக்களின் உற்சாகத்தைத் தட்டி எழுப்பியிருக்[illegible] நான் மிகவும் மகிழ்ந்திருப்[illegible]" என குறிப்பிட்டார்.

[illegible]ம் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சமூக சேவை என்பது, பொருளையோ புகழையோ [illegible] தரக்கூடிய தொழிலல்ல[illegible] துன்புற்றவருக்குத் துணை செய்யும் இரக்கத்தோடும் பரிவோடும், தாங்களாகவே பிரியப்பட்டு செய்யப்பட வேண்டிய ஒன்றே சமூக சேவையாகும்." என்றும் குறிப்பிட்டார்.

பண்டிதர் பயம் காட்டுகிறார்

மொழி வழி மாநிலக் கிளர்ச்சிகளில் காங்கிரசார் ஈடுபடக் கூடாதாம்!

கள்ளிக்கோட்டை, நவ. 16—

காங்கிரஸ்காரர்கள் பிரிவினை மனப்பான்மையுடன் நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுக்கும் படி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் நேரு தலைவர்களுக்கு அறிவித்திருக்கிறார்.

இம்மாதம் 14ம் தேதி டெல்லியிலிருந்து நேரு எழுதிய கடிதத்தில், "சில காங்கிரஸ்காரர்கள் உட்பட, மொழிவழி மாநிலம் அமைக்கும்படி, மாநிலங்களில் மக்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். மொழிவழி பிரச்சினையை மட்டும் தனிப்பட்ட முறையில் ஆலோசனை செய்ய இயலாது. மொழிவழி மாநிலங்களை அமைக்கும்படி கோரி செய்யும் கிளர்ச்சி தேவையற்றது—கெடுதியும் உண்டாக்கக் கூடியது.

இது பற்றிய கிளர்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபடக் கூடாதென காங்கிரஸ் செயற் குழு கேட்டுக் கொண்டிருக்கிறது.

கிளர்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டால், காங்கிரஸ் செயற் குழுவின் தெளிவான ஆலோசனையை மீறியதாகவும் கட்சியின் ஒழுங்கை மீறியதாகவும் கருதப்படும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னையில் அல்ல; ஒரிசாவில்!

கட்டாக், நவ 16—

மக்கள் பிரதிநிதித்வச் சட்டம் 123-வது பிரிவின் கீழ் பெரிய தவறுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக ஒரிசா சட்ட அமைச்சர் நிலபந்து சாகுவின்மீது இன்று தேர்தல் டிரிபியூனல் குற்றம் சாட்டித் தீர்ப்பளித்தது.

கெண்டிராபாரா தொகுதியிலிருந்து ஒரிசா சட்டசபைக்கு சாகு தேர்ந்தெடுக்கப்பட்டார். அது செல்லாதென டிரிபியூனல் தீர்ப்பளித்தது.

விண்ணப்பம் செய்த ஜதுமங்கராஜிற்குச் செலவுத் தொகையை சாகு கொடுக்க வேண்டுமென்றும், டிரிபியூனல் தீர்ப்பளித்து விட்டது.

செய்திச் சுருள்

★

பகுத்தறிவு படிப்பகம்

நவல்பூர், நவ. 16—

11—11—53ல், இரண்டாவது ஆண்டு பொதுக் குழு கூட்டம் தோழர் என். பி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள், என். ஏ. சுப்ரமணி தலைவராகவும், என். ஜி. சந்திரசேகரன் துணைத் தலைவராகவும், என். பி. நடராசன் செயலாளராகவும், சி. எஸ். கோவிந்தராசன் உதவி செயலாளராகவும் என். எம். நாராயணசாமி பொருளாளராகவும், செயற் குழு உறுப்பினர்களாக உ. நாதன், என். எம். மணி, ஆ. தமீம், என். கிருஷ்ணன், என். எம். கண்ணன், என். பி. சுப்பராயன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

தாராவி (பம்பாய்), நவ. 16—

8-11-53ல், தோழர் என். எஸ். இளங்கோவுக்கு மன்றத்தின் சார்பில் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. அதே தினத்தில் ஆத்தூக்குடி சதி வழக்கு நிதிக்காக மன்றத்தின் சார்பில் ரூ 25-5-3 தோழர் இளங்கோ அவர்களிடம் தரப்பட்டது.

மன்றத்தின் சார்பில் ஆத்தூக்குடி பற்றிய தீர்மானம் சென்னை முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

திருவல்லிக்கேணி பாண்டியன் படிப்பகம்

சென்னை, நவ. 16—

15—11—53-ல், நடைபெற்ற உறுப்பினர் குழுவில், பட்டிவீரன்பட்டி டபிள்யு. பி. ஏ. சௌ. பாலம் மான் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தும், ஆத்தூக்குடி சதிவழக்கை வாபஸ் பெறக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வ. உ. சி. மன்றம்

எருக்கஞ்சேரி, நவ

எருக்கஞ்சேரி கி... முன்னேற்றக் கழக... வ. உ. சி. ... ஐயத்தையர் ... 8—11—53 அன்று ... தோழர் மு. கோவிந்தராசலு அவர்கள் தலைமையில் "வ. உ. சி. மன்றம்" என்ற பெயரில் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

அவ்வமயம், தோழர்கள் திருநாவுக்கரசு தலைவராகவும், மு. கிருட்டிணமூர்த்தி துணைத் தலைவராகவும், துரைவேலு செயலாளராகவும், கண்ணப்பன் துணைச் செயலாளராகவும், இலட்சுமணன் பொருளாளராகவும், ஏ. ஏ. நாராயணசாமி, வேதாசலம், சாமிநாதன், ஏழுமலை, பஞ்சாட்சரம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாணவர் சொற்போர்

தஞ்சை, நவ. 10—

10—11—53ல், இவ்வூர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சத்தியசீலன் ... சொற்பொழிவுப்போட்டி ... உயர்நிலைப்பள்ளியில் நடந்தது. மாணவர்களின் இலட்சியம் ... என்ற தலைப்பின்கீழ் பல மாணவர்கள் பேசினர். தோழர் ரெங்கநாதன் மாணவர்களின் இலட்சியம் பற்றி ... தோழியர் ... சார்பில் முதற் பரிசும் ... வேண்டும்" என்ற ... மாணவர்களின் ... பேசிய ... தோழியர் ... க்கு தனிப் பரிசு அளிக்கப்பட்டது.

நன்றியறிவிப்பு

சேலூர் பஞ்சாயத்து போர்டு உபதலைவர் தோழர் என். ஏ. கோவிந்தராசு, பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்கள் தோழர்கள் என். எஸ். பத்திரபாகு நயினார், டி. டி. வேதபுரி, ஆர். மோசே, ஏ. அண்ணாமலை, சேதுராமகண்ணு, ஆகியோர் ஆத்தூக்குடி சதிவழக்கை வாபஸ் வாங்குமாறும், தோழர்களை பாரபட்சமின்றி விடுதலை செய்யுமாறும் சென்னை பிரதம மந்திரி அவர்களுக்கு மகஜர் அனுப்பியுள்ளமைக்கு அவர்களுக்கு, சேலூர் தி. மு. கழகச் சார்பில் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று செயலாளர் வி. இ. செயராமன் அறிவிக்கிறார்.

பாராட்டு விருந்து

பண்டாரவாடை, நவ 13—

6—11—53-ல், பண்டாரவாடை காஸ்மாபாலிட்டன் கிளப் தலைவர் ஜனாப் பி. ஏ. குலாமைதீன், பி.ஏ., அவர்கள் சட்டப் பரீட்சையில் வெற்றி பெற்றதைப் பாராட்டி கிளப்பின் சார்பில் ஒரு தேநீர் விருந்தும், இரவு 8 மணிக்கு உணவு விருந்தும் நடைபெற்றது. தேநீர் விருந்துக்கு ஜனாப் டி. ஏ. முகம்மது இபுராஹீம் அவர்களும், உணவு விருந்துக்கு ஜனாப் வி. பி. பீர் முகம்மது அவர்களும் தலைமை வகித்தார்கள். ப. கா. இ. இராஜ முகம்மது, தோழர் ஜி. என். கோவிந்தசாமி வெற்றி பெற்ற ஜனாப் குலாம் மைதீனைப் பாராட்டிப் பேசினர்.

தென்காசியில் நாடகம்

தி. மு. கழகத் தோழர் செல்லப்பாண்டியன் அவர்களால் எழுதப்பட்ட '... ...' என்ற நாடகம் '... நாடக சபா' தமிழன் நாடக சபை ... தென்காசி கன்னிகாபரமேஸ்வரி தியேட்டரில் 8-11-53 அன்று நடைபெற்றது. நாடகத்திற்கு ஏராளமான பொது மக்கள் வந்திருந்தனர்.

மக்கள் முன்னேற்றக் கழகம்

ஆற்காடு, நவ. 15—

6—11—53ல் கூடிய கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்டங்களைப் பாராட்டியும், மாண்ட வீரர்களுக்கு வணக்கம் செலுத்தியும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

கதர் கிராம கைத்தொழில் அபிவிருத்தி

சென்னை, நவ. 16—

கதர் கிராமக் கைத்தொழில் சென்னை ஆலோசனை போர்டு கூட்டம் இன்று ஆரம்பமாகியது. மாநாட்டை ஆரம்பித்து வைத்து மந்திரி எம். பக்தவத்சலம் பேசுகையில், மாகாணத்தில் கதர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்ட 5000 நூற்பாளர்களும், 2 000 நெசவாளர்களும் இருக்கிறார்கள். ஆண்டுக்கு 25 லட்சம் கெஜம் நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆந்திராவிலும், சென்னையிலும் சேர்த்து 11 உற்பத்தி செண்டர்கள் இருந்தன. இதில் பெரும் பகுதி கதர் உற்பத்தி செய்யப்படும் 5 செண்டர்கள் எஞ்சிய சென்னை மாகாணத்தில் இருக்கின்றன. 1947—48-ம், 1950—51 ஆண்டுகளுக்கிடையே ... உற்பத்தி செண்டர்களில் சராசரி 6½ லட்சம் கெஜம் கதர் உற்பத்தி செய்யப்பட்டது. 1951—52-ல் இது உற்பத்தி 12 69 000 கெஜமாகவும் 1952 — 53-ல், 16,95 000 கெஜமாகவும் உயர்ந்தது என்று கூறினார்.

குனியமுத்தூர் தி. மு. கழகம்

16—11—53ல், தி. மு. கழகக் கூட்டம் தோழர் கே. ஏ. பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, டபிள்யு. பி. ஏ. சவுந்தரபாண்டியனார் துணைவியார் பாலம்மாள் அம்மையார் இயற்கை எய்தியதற்கு வருந்தியும், அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது. தோழர் ரு. அ. அய்யாசாமி துணைச் செயலாளராக இருந்த பதவியை விட்டு விலகுவதாக தந்த கடிதத்தை ஏற்று தோழர் க. இராமு அவர்களைத் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர் தங்கமாணிக்கம் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

சென்னை 26-வது ... தி. மு. கழ...

15—11—53-ல் நடைபெற்ற சென்னை பெரிமெட்டு ...-வது வட்டம்) தி. மு. கழ... முதல் செயற்குழு கூட்டத்தில் ... சவுந்திரபாண்டியனார், ...த்தை ... கைவல்யம், திரு. ... க., ... ஆகியோர் ... அனுதாபம் தெரிவித்து, தி. மு. கழக அறப்போர் வீரர்களைப் பாராட்டியும், ஆத்தூக்குடி தோழர்களை விடுதலை செய்யக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பத்திரிகையாளர் சதானந்த் காலமானார்

★

சென்னை, நவ. 18—

பிரபல பத்திரிகையாளரும், 'பிரஸ் ஜர்னலி'ன் ஆசிரியருமான எஸ். சதானந்த் நேற்று பிற்பகல் மைலாப்பூர் ஆஸ்பத்திரியில் காலமானார். அவருக்கு வயது 53

தோழர் சதானந்த், 1932-ல் டாக்டர் வரதராஜுலு நாயுடுவிடமிருந்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையை வாங்கி நடத்தினார். 1934-ல் சென்னையில் 'தினமணி'யைத் துவக்கினார். காலஞ்சென்ற தோழர் வ. ரா.—வை ஆசிரியராகக் கொண்டு 'பாரததேவி' நடத்தினவரும் இவர்தான். இவருடைய பிரிவு பத்திரிகை உலகின் எதிர் முகாமுக்கு நட்டமாகும்.

பம்பாய் திராவிடர்களின் போர் முழக்கம்!

மதுங்கா, தாராவி, அந்தேரி, சயான், பாண்டுப், கொலாபா முதலிய பகுதிவாழ் நம்மின மக்களின் உரிமை வேட்கை!

பம்பாயில் என். எஸ். இளங்கோ அலுவல்கள்

7—11—53 அன்று மாலை 6-30 மணியளவில், மதுங்கா தி. மு. கழகச் சார்பில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் செயலாளர் ஜோதிநாயகம் தலைமையில், கப்பூ கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. தோழர்கள் இ. என். எஸ். பிச்சையப்பா, என். எஸ். இளங்கோ ஆகியோர், கழகக் கொள்கைகளை விளக்கி சொற்பொழிவாற்றினர். கூட்டத்திற்குப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.

8—11—53 அன்று காலை 12 மணியளவில், தாராவி சௌந்திரபாண்டியன் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. பெருவாரியான கழக ஊழியர்கள் திரண்டு வந்திருந்தனர். தோழர் மா. இரா. குறள்தாசன், சிறிது நேரம் சொற்பொழிவு நிகழ்த்தி, வந்திருந்தோரை வரவேற்றார். பின்னர், தோழர் என். எஸ். இளங்கோ, மன்றம் ஆற்றும் பணி பற்றியும், வருங்காலத்தில் நடத்துகொள்ள வேண்டிய முறை பற்றியும் ஒரு விளக்கவுரை ஆற்றினார்.

8—11—53 அன்று, அந்தேரி தி. மு. கழகச் சார்பில, அந்தேரி தி. மு கழக அலுவலகத்தில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. பி. செண்பக பாண்டியன் வரவேற்புரை நிகழ்த்தினார். கழகச் செயலாளர் எ... கணேசன் தலைமை தாங்கினார். என். எஸ். இளங்கோ கழகக் கொள்கைகளை விளக்கி சொற்பொழிவாற்றினார். சிறுவன் குருசாமி இயக்கப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்.

8—11—53 அன்று மாலை, தாராவி தி. மு. கழகச் சார்பில், ஒரு மாபெரும் ஆத்தூக்குடி வழக்கு கண்டன ஊர்வலம் நடைபெற்றது. இரவு 7-15 மணிக்கு, வாழைக்கட்டவாடி (தாராவி)யில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், நீண்ட நேரம் கழகக் கொள்கைகளை விளக்கி, தோழர் என். எஸ். இளங்கோ பேசினார். (விபரம் பின்னர் வெளிவரும்)

9—11—53 அன்று மாலை, சையன் தி. மு கழகத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம், இராமர் கோவில் மைதானத்தில், நடைபெற்றது. செயலாளர் எஸ். இராசன் தலைமை தாங்கினார். தோழர்கள் எஸ். எல். ஜான், பி. சுகுணசங்கரன், அ. அ. செல்லையா, த. மு. பொற்கோ, எஸ். வள்ளிநாயகம், என். எஸ், இளங்கோ முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். வேலாயுதம், முனுசாமி ஷண்முகராசன் கழகப் பாடல்கள் பாடினர், கே. ஆர். பழனிச்சாமி, டி. கே. கோவிந்தராசன் முயற்சி பாராட்டத்தக்கது.

11—11—53-ல், பாண்டுப் தி. மு. கழகத் திறப்புவிழா பொதுக் கூட்டம், பாண்டுப் ஆக்ரா ரோட், கன்னட சமாஜத்தினருகில் இரவு 8 மணியளவில் நடைபெற்றது. தோழர் கே. எஸ். அய்யா தலைமை தாங்கினார். தோழர்கள் டி. எஸ் நாராயணன், சுகுணசங்கரன், த. மு. பொற்கோ, என் எஸ் இளங்கோ பேசினர். கன்னட நாட்டைச் சேர்ந்த தோழர் பண்டிட்ஜியின் ஒத்துழைப்பு கழகத்துக்கு இருப்பது பாராட்டத்தக்கது

12-11-53 அன்று, கொலாபா தி. மு கழகத் திறப்பு விழா, இரவு 8-30 மணிக்கு, கொலாபா லேன் கேட் அருகில் உள்ள காமா ஹாலில் நடைபெற்றது. தோழர் கே. கே. இராமனுஜன் தலைமை தாங்கினார். தோழர்கள் சு. தங்கவேலர், எல் என். செழியன், ஏ. எஸ். அன்பாசு, எஸ். வள்ளிநாயகம், என். எஸ். இளங்கோ முதலியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

பம்பாய் வட்டாரங்களில் தமிழர்களிடையே எழுந்துள்ள இந்த புத்துணர்ச்சியும், ஆர்வமும் ஸ்தாபன ரீதியாக போராட, புதிய புதிய கழகங்களை தோற்றுவிக்கிறது.

மற்றவர்க்குக் கூறும் பாராட்டுக்கு சீற்றம்!

தமக்கும் வரவேற்பு வேண்டும் என்கிறார் சண்முகம்!

சென்னை, நவ. 17—

'அவ்வையார்' படம் மகிமை பற்றி பேசப்பட்ட பாராட்டுக் கூட்டமொன்றில், நடிகர் டி. கே. சண்முகம் கலந்து கொண்டார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மந்திரிகளுக்கு மாத்திரம் வரவேற்பளிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், கலைஞர்களுக்கும் சென்னை நகரசபையில் வரவேற்பளித்து கவுரவிக்க வேண்டும்."

மதுவும், தீய எண்ணங்களும் கேடு பயக்கும் இரு பொருள்கள்!

'அதிகார போதை'யையும் இணைத்துக்கொள்ள வேண்டும் ஆச்சாரியார்!

சென்னை, நவ. 16—

சென்னை "க்வீன் மேரீஸ்" ... இலக்கியக் கழகத்தின் ...-வது ஆண்டு விழாவில் பேசிய முதலமைச்சர் ஆச்சாரியார் "... செய்யும் தீய எண்ணங்களை உள்ளத்திலிருந்து விரட்ட ... பத்திரிகைகளைப் ... மாறு, கூறினார்.

"எதைச் செய்தாலும், தாங்கள் செய்வதின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். மனித மூளை, விலை உயர்ந்த புகைப்படக் கருவி போன்றது. கேட்கிற, பார்க்கிற எல்லாவற்றையும் அது பதிவு செய்து கொள்ளும். அதைக் கெடுக்கிற இரண்டு பொருள்கள், மதுவும் தீய எண்ணங்களும். ... மது தடை செய்யப்பட்டது. கலை புத்தகங்கள் படிப்பது. தீய எண்ணங்களை விரட்டும்" என்று குறிப்பிட்டார்.

திருமணம்

வெஞ்சமடை தி. மு. கழகத் தோழர் தி. வகாப் அவர்களின் திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அனுப்பப்பட்டது—இந்த ரூ 1 வரப்பெற்றோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

மறைவு

விருத்தாசலம், நவ 17—

தி. மு. கழகத்தைச் சேர்ந்தவரும், முன்னாள் மாவட்டச் செயலாளருமான தோழர் சி. முனுசாமி அவர்களின் பெண் குழந்தை காஞ்சனா 14-11-53ல், இயற்கை அடைந்ததைக் குறித்து வருந்துகிறோம் என விருத்தாசலம் தி. மு. கழகம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அறிஞர் அச்சகத்தில் (...) நாராயண ... தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: ... அண்ணாதுரை, எம். ஏ.